செ.வெ.எண்.64 நாள்.05.02.2018

**பள்ளி மாணவ – மாணவியர்களை போராட்டத்தில் ஈடுபடுத்துபவர் மீதும், ஈடுபட தூண்டுபவர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் கடும் எச்சரிக்கை**

*************

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது கோவிந்தவாடி அரசினர் மேல்நிலைப்பள்ளி மாணவ / மாணவியர்களை சிலர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு வலுக்கட்டாயமாக அழைத்து வந்து போராட்டத்தில் ஈடுபட செய்துள்ளார்கள். அந்தப் பள்ளியின் கூடுதல் கட்டடத்திற்கு மாற்று இடம் மாவட்ட நிர்வாகத்தால் தேர்வு செய்யப்பட்டுவிட்ட நிலையில் இதுபோன்ற செயல் கண்டிக்கத்தக்கது என மாவட்ட ஆட்சியர் நேரில் எச்சரித்தார்.

இதுபோன்று மாவட்டத்தில் பல்வேறு பள்ளிகளிலிருந்து மாணவ–மாணவியர்களை பள்ளிக்கு செல்லவிடாமல், தடுத்து, கல்வி கற்பதற்கு இடையூறு ஏற்படும் வகையில் போராட்டத்தில் ஈடுபட வலுக்கட்டாயமாக அழைத்து வரும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

செய்தி வெளியீடு,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

காஞ்சிபுரம்.